தேதி : 18.10.2024

Spl.C.C. : 1/2022

PW. : 1

பெயர் : Tr.Muthukaluvan

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

*(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

1. கருணாகரன் என்பவரின் இணைய வழி பட்டா மாறுதல் கோரும் மனுவினை பரிந்துரை செய்வதற்கு லஞ்ச பணம் கேட்டு பெற்றதாக தான் இந்த வழக்கு என்றால் சரிதான். எனது அலுவலக கோப்பின் படி சம்பவம் 12.01.2021–ம் தேதி என்றால் சரிதான். பட்டா மாறுதல் கோரும் நபரின் தந்தை பெயர் தவறுதலாக இருந்தால் அந்த மனு பரிந்துரை செய்யப்படுமா இல்லையா என்றால் பரிந்துரை செய்யப்பட மாட்டாது.

2. பட்டா மாறுதல் கோரும் விண்ணப்பங்களின் புல எண் 29/2 க்கு புகார் தாரரின் தந்தை பெயர் கருப்பையா என்றும் புலஎண் 38/2 புகார்தாரின் தந்தை பெயர் கருத்தையா என்றும் இருந்தால் பட்டா மாறுதல்

கோரும் மனு பரிந்துரை செய்யப்படுமா என்றால் ஆவணங்களை பரிசீலனை செய்து கிராம விசாரணை அடிப்படையில் முடிவு செய்யப்படும். பட்டா மாறுதல் கோரும் புகார்தாரரின் விண்ணப்பம் 19.01.2021ல் (சம்பவத்திற்கு பின்னர்) பாரதிதாசன் என்ற கிராம நிர்வாக அலுவலரின் பரிந்துரையின் பேரில் இளையாங்குடி துணை வட்டாட்சியரால் தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

3. புல எண் 38/1–க்கு கருத்தையா மனைவி மீனாள் என்ற பெயர் புகார்தாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் மீனாட்சி என்று உள்ளதால் அதனை திருத்தம் செய்யக்கோரி இளையான்குடி வட்டாட்சியர் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியருக்கு 29.01.2021ல் பரிந்துரை செய்தார் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். எதிரி மீது குற்ற வழக்கு தொடர இசைவாணை வழங்க கோரி எனக்கு மாதிரி இசைவாணை கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் இயந்திரத்தனமாக இசைவாணை வழங்கி உள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2024.10.18 15:50:11 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.